செ.வெ. எண்: 132 நாள்: 18.02.2012

**சென்னையில் தேசிய கைத்தறி கண்காட்சி 2012**
**இரண்டாவது வாரம்**

சென்னை மாநகரத்தின் மையப்பகுதியான எழும்பூர் பகுதியில் அமைந்துள்ள கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் கடந்த பல ஆண்டுகளாக ஒவ்வொரு வருடமும் சென்னை வாசிகள் ஆவலுடன் எதிர்பார்க்கும் ஒரு நிகழ்ச்சி தேசிய கண்காட்சியாகும். நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் கைத்தறி துணி வகைகளின் விற்பனையினை அதிகரிக்க தேசிய கைத்தறி கண்காட்சி நடைபெறுகிறது.

தேசிய கைத்தறி கண்காட்சி 2012 சென்னை எழும்பூரில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி கண்காட்சி திடலில் 10.2.2012 அன்று துவக்கப்பட்டு மார்ச் 5 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த கண்காட்சி வாடிக்கையாளர்கள் பெருமளவில் வந்து கைத்தறி இரகங்களை வாங்கி செல்வதாலும், பொது மக்களின் ஏகோபித்த வேண்டுதலுக்கு இணங்க மாலை 2.00 மணிக்கு பதிலாக இனிமேல் காலை 11.00 மணி முதல இரவு 9.00 மணி வரை நடைபெறும். கண்காட்சிக்கு நுழைவு கட்டணம் ஏதும் கிடையாது. விற்பனையாகும் இரகங்களுக்கு, சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. இந்த தேசிய கைத்தறி கண்காட்சியில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள தலைமைக் கூட்டுறவு சங்கங்களும் மற்றும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் கலந்து கொண்டு, தங்களது உற்பத்தி இரகங்களான பட்டு மற்றும் பருத்தி சேலைகள், இல்லத்திற்கு தேவையான துணி வகைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் அனைத்து விதமான துணி இரகங்களை, சென்னை மற்றும் புற நகரங்களில் வசிக்கும் ஒரே இடத்தில் வாங்கும் வண்ணம் இந்த கண்காட்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தேசிய கைத்தறிக் கண்காட்சியில் தமிழகம் மற்றும் இதர மாநிலங்களில் பிரசித்திப் பெற்று விளங்கும் 110 எண்ணிக்கையிலான கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பங்கேற்று அந்தந்த மாநிலத்திலும் உற்பத்தியாகும் பிரத்தியேக துணி இரகங்கள் வாடிக்கையாளர்களின் எண்ணத்தையும், கருத்தையும் கவரும் வண்ணம், காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளது, இக்கண்காட்சியின் சிறப்பு அம்சமாகும்.

பொது மக்களின் நலனுக்காக பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் கோ-ஆப்டெக்ஸ் வாடிக்கையாளர்களிடமிருந்து பாரம்பரியமிக்க பட்டு புடவைகளை பெற்று இந்த கண்காட்சியில் பார்வைக்கு வைத்து, பட்டு பராமரித்தல் குறித்து விளக்கங்கள் தரப்படுகிறது. இக்கண்காட்சியில் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட 1912 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரையிலான பாரம்பரியமிக்க பட்டு புடவைகள் வாடிக்கையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இது மிகப்பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

கடந்த வருடம் தேசிய கைத்தறி கண்காட்சிக்கு 3 இலட்சம் மக்கள் வருகை புரிந்து ரூ.3.00 கோடி அளவிற்கு சிறப்பான விற்பனை ஏற்படுத்தியதால், பெரிய வெற்றி பெற்றது. இந்த வருடம் 5 இலட்சம் மக்கள் இந்த கண்காட்சிக்கு வருகை புரிவார்கள் எனவும் ரூ.5.00 கோடி அளவிற்கு விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கண்காட்சியில் இதுவரை ரூ. 50.00 இலட்சம் விற்பனையாகியுள்ளது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.**